மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 86, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.பி. செந்தில்குமார், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

86—

கால்நடை மருத்துவமனை

***7407—திரு. ஐ.பி. செந்தில்குமார்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனி தொகுதி, பழனி ஊராட்சி ஒன்றியம், அ. கலையம்புத்தூர் ஊராட்சி, இராஜபுரத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திண்டுக்கல் மாவட்டம், பழனி தொகுதி, அ. கலையம்புத்தூர் ஊராட்சி, இராஜபுரம் கிராமத்தில் 364 கால்நடை அலகுகள் மட்டுமே உள்ளதால் அங்கே கால்நடை கிளை நிலையமோ, கால்நடை மருந்தகமோ அல்லது கால்நடை மருத்துவமனையோ துவங்கிட சாத்தியக்கூறுகள் இல்லை என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.பி. செந்தில்குமார் அவர்கள்.*

திரு. ஐ.பி. செந்தில்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பழனி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அ. கலையம்புத்தூர் ஊராட்சி கிட்டத்தட்ட பத்தாயிரத்திற்கும் அதிகமான மக்கள்தொகை கொண்ட பகுதி. நான் கேட்டிருக்கின்ற கேள்வியில், மையப் பகுதியில் அமைந்திருக்கின்ற இராஜபுரம் பகுதி, பழனி மேற்கு ஒன்றியத்தைச் சார்ந்த*

2019 ஜூலை 11]

கிட்டத்தட்ட 13 ஊராட்சிகளுக்கும், 2 பேரூராட்சிகளுக்கும் மத்தியில் அமைந்திருக்கக்கூடிய ஓர் ஊராகும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தப் பகுதியில் கிட்டத்தட்ட 364 அலகுகள் இருக்கின்றன என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த மருத்துவமனையில் மருத்துவத்திற்காக வரக்கூடிய கால்நடைகளின் எண்ணிக்கையானது கிட்டத்தட்ட 3,200 பசு மாடுகளும், 850 எருமை மாடுகளும், 1,500 வெள்ளாடுகளும், கணக்கில் வராத கிட்டத்தட்ட 5,500-க்கும் மேற்பட்ட கால்நடைகளும், 2,000 கோழி வளர்ப்பும் அந்தப் பகுதியில் இருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அ. கலையம்புத்தூர் ஊராட்சியில், இராஜபுரம் பகுதியிலோ அல்லது அந்தப் பகுதிக்கு அருகில் 1½ கிலோ மீட்டர் தொலைவில் இருக்கக்கூடிய நெய்க்காரப்பட்டி பேரூராட்சியில் கே.வேலூர் என்ற பகுதியில் இப்போது இருக்கக்கூடிய மருந்தகத்திற்கு அருகில் கால்நடை மருத்துவமனை அமைப்பதற்கான போதிய இடவசதி இருக்கிறது. எங்களுடைய மாவட்டத்தில் இந்தப் பகுதி முழுமையாக விவசாயத்தையும், குறிப்பாக அதிகமான கால்நடை வளர்ப்பையும் மேற்கொண்டிருக்கக்கூடிய முக்கியமான பகுதியாகும். குறிப்பாக திண்டுக்கல் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், கால்நடை மருத்துவமனையானது கொடைக்கானலிலும், நிலக்கோட்டை, பள்ளப்பட்டி, ஒட்டன்சத்திரம் மற்றும் கள்ளிமந்தையம் ஆகிய பகுதிகளுக்கு மட்டுமே இருக்கிறது. என்னுடைய பழனி தொகுதியில், நான் மேலே குறிப்பிட்டுள்ள பகுதியில் ஒரு கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வர வேண்டும். ஏனென்று சொன்னால், அந்தப் பகுதியில் கால்நடை மருத்துவமனை அமைக்கின்றபொழுது, 2 உதவி மருத்துவர்கள் அதில் இடம்பெறக்கூடிய வாய்ப்பைப் பெறுவார்கள். அறுவை சிகிச்சை அரங்கம் அங்கு உருவாகும். எக்ஸ்ரே போன்ற நவீன கருவிகள் அங்கு நிறுவப்படும். எனவே, வேளாண் பெருங்குடி மக்களுடைய உணர்வை சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு இதைக் கேள்வியாக முன்வைக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேள்வி கேட்கின்றபொழுது இராஜபுரத்தில்

கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா என்று கேட்டிருந்தார்கள். அதனால், இராஜபுரத்தில் இருக்கின்ற கால்நடை அலகுகளின் எண்ணிக்கையை வைத்துதான் நான் பதில் சொன்னேன். உறுப்பினர் அவர்கள் அ.கலையம்புத்தூர் ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளிலும், அருகிலிருக்கின்ற ஊராட்சிப் பகுதிகளிலும் கால்நடைகளின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதாகச் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்ற இராஜபுரம் பகுதியை உள்ளடக்கிய அ.கலையம்புத்தூர் ஊராட்சியில் பெருமாள்புதூர் பகுதியில் கால்நடை மருந்தகத்திற்கு புதிய கட்டடம் 2018 ஆம் ஆண்டில் கட்டப்பட்டு செயல்பட்டு வருகிறது. அதேபோல், இராஜபுரம் கிராமத்திற்கு 3 கி.மீ. அருகில் பெருமாள்புதூர் பகுதியில் கால்நடை மருந்தகம் செயல்பட்டு வருகின்றது. அங்கு 3,000-க்கும் குறைவாகத்தான் கால்நடைகளின் எண்ணிக்கை இருப்பதாக எங்களுக்குத் தகவல் வந்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தப் பகுதியில் அதிகமான எண்ணிக்கையில் கால்நடைகள் இருப்பதாகச் சொல்லியிருக்கின்றார்கள். இருப்பினும், துறை அதிகாரிகளை அந்தப் பகுதிக்கு அனுப்பி, ஆய்வு செய்து, தேவைப்படுமாயின் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய அந்தப் பகுதியில் மருந்தகத்திற்கான தேவையை அறிந்து, அதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.பி. செந்தில்குமார் அவர்கள்.*

திரு. ஐ.பி. செந்தில்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் மாவட்டத்தில் இருக்கக்கூடிய 7 சட்டமன்றத் தொகுதிகளில், கிட்டத்தட்ட 50 சதவீதத்திற்கும் அதிகமாக விவசாயத்தை மையமாகக் கொண்ட மக்கள் வாழ்கின்ற பகுதி பழனி பகுதியாகும். இங்கு 20-க்கும் மேற்பட்ட ஊராட்சிகளிலும், 3 பேரூராட்சிகளிலும் அதிகமான கால்நடை வளர்ப்பு இருக்கிறது. குறிப்பாக, பழனி பகுதி தமிழ்நாட்டில் அதிக வருவாயைப் பெற்றுத் தரக்கூடிய பிரசித்தி பெற்ற அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் அமைந்துள்ள பகுதி. அந்தத் திருக்கோயிலுக்குச் சொந்தமான இடம் பழனியில் இருக்கிறது. ஆகவே, நான் பணிவோடு தெரிவித்துக்கொள்ள*

2019 ஜூலை 11]

விரும்புவது என்னவென்றால், எங்கள் மாவட்டத்தின் மையப் பகுதியில், முக்கியமான பகுதியில் இருக்கக்கூடிய பழனியில் ஒரு கால்நடை மருத்துவக் கல்லூரியை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களும் எதிர்காலத்தில் கொண்டு வர முயற்சி செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமைகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழனி தொகுதியைப் பொறுத்தவரையில், 14,000 மாட்டினங்களும், 15,800 ஆட்டினங்களும், 3,18,000 கோழியினங்களும் உள்ளன. இவற்றிற்கு மருத்துவம் மற்றும் இனப்பெருக்க சேவைகளை வழங்கிட 13 கால்நடை மருந்தகங்கள் மற்றும் 11 கால்நடை கிளை நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன என்பதை முதலில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

முற்பகல் 10-35

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கால்நடை மருத்துவக் கல்லூரி அமைத்துத் தர வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். ஏற்கெனவே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒரத்தநாடு மற்றும் திருநெல்வேலி பகுதிகளில் புதியதாக கால்நடை மருத்துவக் கல்லூரிகளை அமைத்துக் கொடுத்திருக்கிறார்கள். இன்றைக்கு மாணாக்கர்களுடைய எண்ணிக்கையைப் பொறுத்து, எந்தப் பகுதியிலே அதற்குண்டான சாத்தியக்கூறுகள் இருக்கின்றனவோ, அந்தப் பகுதிகளில்தான் கால்நடை மருத்துவக் கல்லூரி துவங்குவது பற்றிப் பரிசீலனை செய்யப்படும். இருந்தாலும்கூட மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் வேண்டுகோளினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, தேவைப்படுமாயின் பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 87, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ஸ்டாலின் குமார், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*